வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 10.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய துறைகளில் இந்தியா உலகளாவிய சக்தியாக மாறி உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இளைஞர்களை மையமாகக் கொண்டு இந்தியாவின் விளையாட்டு உள்கட்டமைப்பின் விரிவாக்கம் நாட்டை உலகளாவிய விளையாட்டு சக்தியாக மாற்றுவதற்கு ஊக்குவிக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையால் இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் பன்மடங்கு முன்னேறி உள்ளது என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், செல்லிப்பட்டு கிராமத்தில் நடைபெற்றது.

*மத்திய அரசு-ஆத்ம நிர்பர்*

கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய துறைகளில் இந்தியா உலகளாவிய சக்தியாக மாறி உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த காலக் கட்டத்தில் பாதுகாப்புத் துறையில் தெளிவு, உறுதி மற்றும் நம்பிக்கை ஆகியவை மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு ………….

(வாய்ஸ்)

2016-ஆம் ஆண்டு நடைபெற்ற சர்ஜிக்கல் ஸ்டிரைக் முதல் 2025-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் வரை இந்தியா தனது தேசிய பாதுகாப்பிற்காக தீர்க்கமான முடிவுகளை எடுத்துள்ளது. எல்லை தாண்டிய பயங்கரவாத போராட்டத்தில் 9 பயங்கரவாத முகாம்களை செயலிழக்கச் செய்து, பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்தது, தேசிய பாதுகாப்பிற்கு சிறந்த சான்றாக விளங்குகிறது. ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியில் உள்நாட்டு உற்பத்தி

முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத் தக்கது. விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் முதல், உயரமான இலகு ரக போர் ஹெலிகாப்டர், எல்சிஎச் பிரசந்தா வரை, உள்நாட்டிலேயே வடிவமைத்து பயன்படுத்தப்பட்டதும் மத்திய அரசின் சாதனைகளில் ஒன்றாகும். பாதுகாப்புத் துறையில் பல புதுமை கண்டுபிடிப்புகள், ஐடெக்ஸ் போன்ற முயற்சிகள், பாதுகாப்பு படைகளுக்கு தேவையான தளவாடங்களை தயாரிப்பதன் மூலம் ஸ்டார்ட்-அப்-கள் மற்றும் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்பு துறையின் ஏற்றுமதிகள் சாதனை அளவாக 23 ஆயிரத்து 622 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது 2014-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34 மடங்கு அதிகமாகும்.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் இப்போது உள்நாட்டு மயமாக்கல் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. 2025-26-ஆம் நிதி ஆண்டில் ராணுவ தளவாடங்கள் கொள்முதலுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் 75 சதவிகிதம் உள்நாட்டு உற்பத்திக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் பாதுகாப்பே பலம், தன்னம்பிக்கையே நமது கேடயம் என்ற மத்திய அரசின் முன்னெடுப்புடன் இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளைக் கண்டுள்ளது.

*பிரதமர்-கிரிராஜ் சிங்*

தேசிய தொழில் நுட்ப ஜவுளி இயக்கம் மற்றும் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் தொகை திட்டம் போன்ற திட்டங்களால் நாட்டின் தொழில் நுட்ப ஜவுளித்துறை விரிவான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ்சிங் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்ட பதிவிற்கு பதில் அளித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இந்தமுயற்சிகள் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதோடு புதுமைகளை புகுத்தி ஏற்றுமதியை ஊக்குவிப்பதாக கூறி உள்ளார்.

*பிரதமர்-விளையாட்டு*

இளைஞர்களை மையமாகக் கொண்டு இந்தியாவின் விளையாட்டு உள்கட்டமைப்பின் விரிவாக்கம் நாட்டை உலகளாவிய விளையாட்டு சக்தியாக மாற்றுவதற்கு ஊக்குவிக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவின் கட்டுரையை பகிர்ந்து கொண்ட பிரதமர், கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் விளையாட்டு உள்கட்டமைப்பின் வளர்ச்சி குறித்து எடுத்துரைத்தார். கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் இந்திய

விளையாட்டுகள் உலக அரங்கில் புதிய உயரங்களை எட்டி உள்ளது என்று திரு மன்சுக் மாண்டவியா தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் விளையாட்டுத் துறையில் கேலோ இண்டியா, நீர் விளையாட்டுகள், தற்காப்பு கலை விளையாட்டுகள், சுதேசி விளையாட்டுகள், பழங்குடியின விளையாட்டுகள், வடகிழக்கு விளையாட்டுகள் உள்ளிட்ட புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

*நமோ-செயலி*

பிரதமர் திரு நரேந்திர மோடி பதவி ஏற்று 11 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி, நமோ செயலியில் தொடங்கப்பட்ட ஜன் மன் கணக்கெடுப்பு நேற்று தொடங்கியது. இந்தக் கணக்கெடுப்பு, நாடு முழுவதும் உள்ள மக்களிடம் இருந்து பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், ஒரே நாளில் 5 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றுள்ளதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த கணக்கெடுப்பின் மூலம் மக்கள் தங்கள் கருத்துக்களை மத்திய அரசுடன் நேரடியாக பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறந்த தளமாக அமைந்துள்ளது. இதன் மூலம் மக்களின் குரல்கள் கருத்தில் கொள்ளப்பட்டு, எதிர்காலக் கொள்கைகளை வடிவமைப்பதற்கு முக்கிய கருவியாக திகழும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

*டெல்லி-ரேகா*

மத்திய அரசின் உள்கட்டமைப்பு உதவியுடன் டெல்லி அரசின் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து நிலைப்பாடுகள் மேம்பட்டுள்ளதாக டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா இன்று தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் தொடர்ச்சியான ஆதரவின் காரணமாக நிலப்பரப்பு, மலைகள், யமுனை சுத்திகரிப்பு மற்றும் காற்று மாசுபாடு போன்ற பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்படும் என்று கூறினார். மேலும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஓக்லா குப்பைக் கிடங்கு அகற்றப்படும் என்றும் திருமதி ரேகா குப்தா உறுதி அளித்தார்.

*புதுச்சேரி-முருகன்*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையால் இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் பன்மடங்கு முன்னேறி உள்ளது என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். இன்று செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர், 2014-ஆம் ஆண்டில் 400 ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக இருந்த, நிலையில் இருந்து, தற்போது 1 லட்சத்து 20 ஆயிரம் ஸ்டார்ட்-அப்-கள் உருவாகி சாதனை படைக்கப்பட்டுள்ளதாக கூறினார். மேலும் 400-

க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்களின் இயக்கம், மகளிர் சக்தி, உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் நாடு முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்வதாக டாக்டர் எல் முருகன் தெரிவித்தார்.

மேலும் புதுச்சேரியின் வளர்ச்சி குறித்து அவர் பேசுகையில் ...........

(வாய்ஸ்)

*புதுச்சேரி-ஆளுநர்*

புதுச்சேரியில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் 2-ஆவது தென்னிந்திய கவுன்சில் கூட்டம் இன்று நடைபெற்றது. தனியார் உணவகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பங்கேற்று, புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்த தொழில் முனைவோருடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், புதுச்சேரியில் தொழில் தொடங்க ஏதுவாக, சூழ்நிலை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளதால் புதிய தொழில் தொடங்க வருமாறு, தொழில் முனைவோர்க்கு அவர் அழைப்பு விடுத்தார். புதிய தொழில் தொடங்குவதற்கு அனுமதி விரைவாக வழங்கப்படுவதாகவும், விமான சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மேலும் புதிய தொழில் தொடங்குவதன் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*புதுச்சேரி-விக்சித் கிரிஷி*

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், செல்லிப்பட்டு கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 255 விவசாயிகள் பங்கேற்றனர்.

இதுகுறித்த ஒரு செய்திக் குறிப்பு (வாய்ஸ்)

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் திட்டத்தின் வேளாண் அதிகாரி திரு தமிழ்செல்வன், காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பொம்மி, வேளாண் அதிகாரி திருமதி சுபா ஆனந்தி, விவசாயிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மீன்வளத் துறையின் அதிகாரிகள் மீன் வளர்ப்பு நுட்பங்கள் பற்றி விளக்கி கூறினர். தினை, பழங்கள், காய்கறிகள், தானியங்கள், காளான், உணவு பதப்படுத்துதல்

குறித்த திட்டங்கள், மண் சுகாதார அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அதன் முக்கியத் துவம் குறித்து இக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

*மாநிலங்களவை தேர்தல்*

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் வரும் 19-ஆம் தேதி நடைபெற உள்ளது. திமுக மற்றும் அஇஅதிமுக சார்பில் 6 வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. திமுக வேட்பாளர்கள் திரு வில்சன், கவிஞர் சல்மா, திரு சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் திரு கமலஹாசன், மற்றும் அஇஅதிமுக வேட்பாளர்கள் திரு இன்பதுரை, திரு தனபால் உள்ளிட்ட 6 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

*விளையாட்டு*

ஆஸ்திரியா நடை போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது. இப்போட்டியின் 35 கிலோமீட்டர் பிரிவில் சந்தீப்குமார் வெள்ளிப் பதக்கத்தையும். ராம்பாபு வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

உலக ராபிட் மற்றும் பிலிட்ஸ் செஸ் சாம்பியன் போட்டி இன்று லண்டனில் தொடங்குகிறது. வரும் 16-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, விதித் குஜராத்தி, நிகல் சரீன், திவ்யா தேஷ்முக் உட்பட 12 பேர் பங்கேற்க உள்ளனர்.

சர்வதேச ஸ்குவாஷ் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் அனாகத் சிங் 36-ஆவது இடத்திற்கும் ஆடவர் பிரிவில் அபய் சிங் 54-ஆவது இடத்திற்கும் முன்னேறி உள்ளனர்.

ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று இறுதி ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி இன்று ஹாங்காங்கை எதிர் கொள்கிறது.

19 வயதிற்கு உட்பட்டோருக்கான வாலிபால் சாம்பியன் பட்டப் போட்டிகள் உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் இன்று தொடங்குகின்றது. இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா ஈரானை எதிர்கொள்கிறது. நாளை கிர்கிஸ்தானுடன் மோத உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய துறைகளில் இந்தியா உலகளாவிய சக்தியாக மாறி உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இளைஞர்களை மையமாகக் கொண்டு இந்தியாவின் விளையாட்டு உள்கட்டமைப்பின் விரிவாக்கம் நாட்டை உலகளாவிய விளையாட்டு சக்தியாக மாற்றுவதற்கு ஊக்குவிக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையால் இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் பன்மடங்கு முன்னேறி உள்ளது என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்-பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், செல்லிப்பட்டு கிராமத்தில் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/10.6.2025/Script.

----------------------------